நாள்: 13.03.2026
SC 65/2022
பெயர் சூர்யபிரகாஷ்
அ.சா.3

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் கூடலூர் சுக்காங்கல்பட்டியில் எனது வீடு மொட்டையத்தேவர் சந்தில் உள்ளது. நான் மகளிர் குழு தனியார் நிறுவனத்தில் Divisional manager ஆக பணியாற்றி வருகிறேன். சின்னமனூர் அலுவலகததில் சம்பளம் வாங்கிவருகிறேன். எனக்கு காலை 10 மணி முதல் 4 மணி வரை வேலை உள்ளது. என்னுடன் கையொப்பம் போட்ட போஸ் மகன் விஜயன் இன்ஜினியராக உள்ளார் எங்கு வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. என்னுடன் பிறந்த சகோதரர் உள்ளார். எனது பெயர் சூர்ய பிரகாஷ் என்ற சந்திரபிரகாஷ் ஆகும். என் தந்தை பெயர் அய்யர் ஆகும். நான் கூடலூர் மந்தையம்மன் கோவில் அருகில் உள்ள தங்கராஜ் டீக்கடையில் டீக்குடித்து கொண்டிருந்தேன். என்னுடன் விஜயன் இருந்தார். மற்றும் 2 பெரியாட்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் சரியாக ஞாபகம் இல்லை. தினமும் டீக்கடைக்கு செல்வது வழக்கம் கிடையாது. பொதுவாக ஐயங்கார் டீக்கடை 24 மணிநேரம் இருக்கும். மற்ற டீக்கடை இரவு 11 மணிக்கு அடைத்துவிடுவார்கள்.

நான் டீக்கடையில் நின்ற சமயம் கடையை எடுத்து வைத்து கொண்டிருந்தார்கள். பிரச்சனை என்பதால் கூட்டமாக இருந்தது. பிரச்சனை 8.30 மணிக்கு நடந்தது. பிரச்சனை 8.30 முதல் 11 மணி வரை நடைபெறவில்லை. 5 நிமிடம் தான் நடைபெற்றது. அதை யார் சொன்னார்கள் என்றால் அங்கு இருந்தவர்கள் சொன்னார்கள். அ.சா.4 சுரேந்தர் சம்பவம் பற்றி என்னிடம் சொன்னார். நானும், சுரேந்திரனும் உறவினர்கள். பார்வை மகஜரில் என்ன என்ன காலங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. என் முன்பும், விஜயன் முன்பும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்து கையெழுத்து வாங்கினார்கள். வழக்கு சம்பந்தமாக காவல்நிலையம் செல்லவில்லை. காவல்ஆய்வாளரிடம் பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் கையெழுத்து போட்ட விவரத்தை சொல்லவில்லை. நான் நின்ற போது டீக்கடை திறக்கவில்லை என்றும், டீக்கடை திறந்திருந்தால் டீக்கடைகாரரிடம் கையெழுத்து பெற்றிருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், சுரேந்தர் என்னுடைய சொந்தம் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயர் சூர்யபிரகாஷ் கிடையாது என்றும், என் அண்ணன் பெயர் தான் சூர்யபிரகாஷ் என்றால் சரியல்ல. என் அண்ணன் பெயர் இந்திர பிரகாஷ் ஆகும். விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை அவர் விசாரித்திருந்தால் என் பெயர் பற்றிய ஆவணத்தை பெற்றிருப்பார் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.03.13 15:27:53 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்